31st March 1969]

(*c*) where the driver and conductor had gone during this incident; and

(*d*) whether the engine of the bus was running when the bus was kept parked?

அரசு போக்குவரத்து பேருந்துக்கு சேதம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஜெயங்கொண்டம் அருகே நின்று கொண்டிருந்த தமிழக அரசு பேருந்தை 1968 மே மாதத்தில் ஒரு சிறுவன் ஓட்டினனா ?

(இ) அதனால் எற்பட்ட சேதம் எவ்வளவு ?

(உ) இச்சம்பவம் நிகழும்போது வலவரும் (Driver) நடத்துனரும் (Conductor) எங்கு சென்றிருந்தனர் ?

(எ) பேருந்தின் இன்ஜின், வண்டி நின்று கொண்டிருந்த பொழுதும் ஓடிக் கொண்டிருந்ததா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) சேதம் ஏதுமில்லை.

(உ) பயணம் செய்யவிருந்த பயணிகளுக்கு பயணச்சீட்டை வழங்கும் பணியில் பயணிகள் துணைவர் (conductor) ஈடுபட்டிருந்தார். பயணிகளின் வரிசையை ஒழுங்குபடுத்துவதில் பயணித் துணைவருக்கு வலவர் (driver) உதவி செய்து கொண்டிருந்தார்.

(எ) இல்லை.

Night Express Buses

*355 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) the routes in which Night Service Express buses are plying and the number of such buses plying;

(*b*) whether bus drivers are changed at nights;

(*c*) whether the seats will be so built as to enable the passengers to sleep during night travel ; and

(*d*) the precautions taken to prevent accidents?

இரவுநேர துரித பேருந்துகள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) இரவு நேர துரித பேருந்துகள் எந்தெந்த தடத்தில் எத்தனை விடப்பட்டிருக்கின்றன ?

(இ) இரவில் வலவர்கள் (Driver) மாற்றப்படுகின்றனரா ?

(உ) தூங்கிக்கொண்டு பிரயாணம் செய்யும் வகையில் இருக்கைகள் அமைக்கப்படுமா ?

(எ) ஆபத்து நேராமல் தடுக்க முன்னேற்பாடுகள் என்ன செய்யப் பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) "சென்னை-திருச்சிராப் பள்ளி", "சென்னை-சேலம்" ஆகிய ஒவ்வொரு முனையிலிருந்தும் இரவு நேர விரைவுப் பேருந்துகள் ஓட்டப்படுகின்றன.

(இ) ஆம்.

(உ) இரவு நேரங்களில் ஓட்டப்படும் பேரூந்துகளில் இருக்கை வசதிகளை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு இப்போது இல்லை.

(எ) ஒவ்வொரு பேரூந்திற்கும் இரண்டு பணியாளர் குழுக்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் விழுப்புரத்தில் மாற்றிக் கொள்கிறார்கள். இரவு நேரங்களில் வண்டியை ஓட்டிச் செல்வதற்கு அனுபவம் முதிர்ந்த சிறந்த டிரைவர்களே நியமிக்கப்படுகின்றனர். பேரூந்துகள் நல்ல நிலையில் வைத்து வரப்படுகின்றன. பழக்கப்படிச் செல்லும் பேரூந்தில் கோளாறு ஏற்பட்டால், மாற்று வண்டி விட விழுப்புரத்தில் உற்றுழிப் பேரூந்து ஒன்றும் உள்ளது.

திரு. டி. சந்தோஷம்: தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் ஓடுகின்ற விரைவு வண்டிகளில் நீண்ட தூரம் செல்கின்ற காரணத்தால் விமானங்களில் கொஞ்சம் சாய்வதற்கு வசதியாக ஆசனங்களை அமைத்திருப்பதைப்போல செய்வதற்கு அரசு முயற்சிக்குமா ? அதற்கான நடவடிக்கையை சீக்கிரமாகச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இப்போது புதிதாக எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கு ஒரு தனியான முறையில் மாறுதல்கள் செய்யப்பட்டு வருகின்றன. அதுவரையில் உறுப்பினர் பொறுத்திருந்து இந்தக் கேள்வியை மீண்டும் கேட்டால் நல்ல முறையில் பதில் சொல்ல முடியும் என்று கருதுகிறேன்.

Tamil Nadu State Transport Department Workers, Nagercoil.

* 356 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(a) whether the workers of Tamil Nadu State Transport Department, Nagercoil staged Satyagraha in November 1968 demanding the implementation of the agreement reached between them and the Transport Department on 20th March 1968 ; and

(b) if so, the details thereof?

அரசு போக்குவரத்துத் தொழிலாளர்கள், நாகர்கோயில்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாகர்கோவில் தமிழக அரசு போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள் 20—3—1968-ல் போக்குவரத்து இலாகாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கேட்டு 1968 நவம்பரில் சத்தியாகிரகம் செய்தனரா ?

(இ) ஆமெனில் அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) தமிழக அரசு போக்குவரத்துத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 1—11—1968-ல் சத்தியாகிரகம் செய்து நாகர்கோவிலிலும் குழித்துறையிலும் உள்ள தமிழ்நாடு போக்குவரத்துத் துறை பணிமனைகளின் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

Workers unemployed due to Nationalisation of Bus Transport

* 357 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of persons absorbed in the Tamil Nadu State Transport Department, who were thrown out of employment on account of the Nationalisation of Bus Transport?